

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை மற்றும் மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் குரலிசை, வயலின், தவில் மற்றும் புல்லாங்குழல் ஆகிய பிரிவுகளில் நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கு விரிவுரையாளர்கள் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி. கவிதா ராமு ஆகியோர் உடனிருந்தனர்.




நூற்றாண்டுகளுக்கு முன்னர் உயர் வகுப்பாரின் கெடுபிடிகளுக்கு ஆளானவர்கள் கூடித் தங்கள் நலனையும், பாதுகாப்பையும் கருதி, “சென்னை ஐக்கிய சங்கம்” (THE MADRAS UNITED LEAGUE) என்ற அமைப்பைத் தொடங்கி சென்னை ஐக்கிய சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில், அச்சங்கம் ”திராவிடச் சங்கம் எனப் பெயர் மாற்றி, “திராவிட மாணவர் விடுதி” (DRAVIDIAN STUDENTS HOSTEL) என்ற பெயரில் விடுதி ஒன்றைத் தொடங்கி, அதன் பின்னர் நீதிக் கட்சி அரசுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சட்டம், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்ற முக்கியமான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழக மக்கள் பெரும் பயன் எய்திட வழிவகுத்த திருமகனார் “திராவிட இயக்கத்தின் தந்தை” எனப் போற்றப்படும் டாக்டர் நடேசனார் அவர்களின் 88வது நினைவு நாளினையொட்டி, நேற்று (18.2.2025), காலை, சென்னை, தியாகராயர் நகர் நடேசனார் பூங்காவில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## சிந்தனைச் சிற்பி

# சிங்காரவேலருக்கு முதல்வர் செவ்வணக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!


சென்னை, பிப்.19-

பாட்டாளி மக்களுக்காகப் பாடுபட்டவர், சுயமரியாதை இயக்கச் சுடரொளி, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடி, சுயமரியாதை இயக்கச் சுடரொளி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்த விடுதலைப் போராளி, இதழாசிரியர், எழுத்தாளர், சென்னை மாநகராட்சி உறுப்பினர் எனப் பல நிலைகளில் இருந்து பாட்டாளி மக்களுக்காகவும் இந்நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்ட சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்தநாள்!**

**தாம் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டபோது ‘குடிஅரசு’ இதழுக்கு வழிகாட்டுமாறு தந்தை பெரியார் கேட்டுக் கொண்டதும் சிங்காரவேலரைத்தான்!**




**"போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி!” எனத் திராவிடப் புரட்சிக்கவி பாரதிதாசனார் போற்றியதும் அவரைத்தான்!**

**தொழிலாளத் தோழர் சிங்காரவேலருக்கு எம் செவ்வணக்கம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னையில் 33 இடங்கள் உட்பட 1,000 இடங்களில் முதல்வர் மருந்தகம்:

# வரும் 24ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் பெரியகருப்பன் பேட்டி!

சென்னை, பிப். 19 -

சென்னையில் 33 இடங்கள் உட்பட தமிழகம் முழுவதும் 1,000 இடங்களில் முதல்வர் மருந்தகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரும் 24ம் தேதி திறந்து வைக்கிறார். பிரதமரின் மக்கள் மருந்தகம் உட்பட எந்த மருந்தகங்களிலும் இல்லாத வகையில் மலிவான விலையில் தரமான மருந்துகள் வழங்கப்படும் என்று அமைச்சர் பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், “முதல்வர் மருந்தகம்” திறப்பு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது.

**கூட்டத்திற்கு பின்னர் அமைச்சர் அளித்த பேட்டி:**



தமிழகத்தில் 980 மருந்தகங்களுக்கு அனைத்து தகுதிகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு திறக்க தயாராக உள்ளது. மீதமுள்ள மருந்தகங்களிலும் பணிகள் விரைவில் முடியும். முதல்வரின் நேரடி பார்வையில் இந்த மருந்தகங்கள் செயல்பட உள்ளது. கூட்டுறவு சங்கம் மூலம் 500, தொழில் முனைவோர் மூலம் 500 மருந்தகங்கள் என 1000 மருந்தகங்கள் திறக்கப்பட உள்ளது. மதுரையில் 52, கடலூர் 49, கோவை 42, தஞ்சை 40 என முதல்வர் மருந்தகங்கள் அமைய உள்ளது. சென்னையில் 33 முதல்வர் மருந்தகங்கள் அமைக்கப்படுகிறது. முதல்வர் மருந்தகம் திறக்கும் தொழில் முனைவோர்க்கு ரூ.3 லட்சம் வரை அரசு மானியம் வழங்குகிறது. வரும் 24ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1000 முதல்வர் மருந்தகங்களை திறந்து வைக்கிறார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் மருந்துகள் கொள்முதல் செய்யப்படும். தேவை ஏற்பட்டால் வெளிச்சந்தையிலும் மருந்துகள் கொள்முதல் செய்யப்படும். பிரதமர் மருந்தகம் உட்பட எந்த மருந்தகங்களிலும் இல்லாத விதமாக மலிவான விலையில் தரமான மருந்துகள் வழங்கப்படும். விரைவில் காலியாக உள்ள ரேசன் கடை பணியாளர் இடங்கள் நிரப்பப்படும். கூட்டுறவுத்துறை பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. விலக்கு வழங்க வேண்டும் என ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். ஒன்றிய அரசு எங்கள் கோரிக்கைக்கு மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஏற்கவும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர் பொருள் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்தியபிரத சாகு, கூட்டுறவு சங்கங் களின் பதிவாளர் க.நந்தகுமார், கூடுதல் பதிவாளர் (நுகர்வு பணிகள்) அம்ரித் உட்பட இணைப்பதிவாளர்கள் மற்றும் கூடுதல் பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

# நிதானம் இல்லாமல் உளறும் சி.வி.சண்முகம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கடும் தாக்கு!

சென்னை, பிப்.19-

நிதானம் இல்லாமல் உளறியிருக்கிறார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் என போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கை வருமாறு:-

“மானம் உள்ள யாரும் பிறரை அப்பா என்று அழைக்க மாட்டார்கள்” என நிதானம் இல்லாமல் உளறியிருக்கிறார் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம். ஜெயலலிதா, சசிகலா, பழனிசாமி என காலத்திற்கு ஏற்றாற் போல போற்றிப் பாடுவதற்காகவே தன் வாயை வாடகைக்கு விடுபவர் தான் சி.வி.சண்முகம்.



“அம்மா... அம்மா..” என அம்மையார் ஜெயலலிதா இருக்கும் போது உருகிய சண்முகத்தின் நாக்கு, ஜெயலலிதா இறந்த பிறகு “சின்னம்மா இல்ல...எங்க அம்மா” என சசிகலாவையே அம்மா ஸ்தானத்தில் வைத்தார். அம்மாவை மாற்றியவர் எல்லாம் அப்பாவை பற்றி பேச அருகதை இருக்கிறதா? அவமானப்படுவது அரிய கலை. அது சண்முகத்திற்கு அற்புதமாக வாய்த்திருக்கிறது.

மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண், குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி, முதியோர்களுக்கு வீடு தேடி மருத்துவம் என அனைத்து வயது பெண்களும் பலன் பெறும் வகையில் தமிழ்நாட்டில் ஆட்சி நடக்கிறது. குறிப்பாக உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கையும் பணிக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளதை பல்வேறு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. முதலமைச்சர் செல்லும் இடங்கள் எல்லாம் கூடும் பெண்கள் அவரைப் பார்த்து “நன்றி அப்பா” என உருகுகிறார்கள். அதனைத்தான் உங்களில் ஒருவன் கேள்வி பதிலில் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டுப் பெண்கள் தலைநிமிர்வது அ.தி.மு.க.வுக்கு உறுத்துகிறது போல. அந்த பெண்கள் அப்பா என முதலமைச்சரை அழைப்பது அடிவயிற்றில் எரிகிறது போல. அதனால்தான், அருவருக்கத்தக்க நாராச மொழியில் பேசியிருக்கிறார் சி.வி. சண்முகம். குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சுனு ஒரு பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

# குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது!

கடலூர், பிப்.19-

குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம், குறிஞ்சிப்பாடி கழக அலுவலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.நாராயணசாமி, டி.காசிராஜன், பி.சுப்பிரமணியன், ஒன்றிய அவைத் தலைவர் ஆசிரியர் ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் வடலூர் நகர கழக செயலாளர் தன. தமிழ்செல்வன், நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், துணை தலைவர் சுப்புராயலு. பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், பேரூராட்சித் தலைவர் கோகிலாகுமார், துணைத் தலைவர் ஆர். ராமர் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, முனிவாழை, பாசார், கீழத்தேனூர் லா.கூடலூர் கீழ்ப்பாடி, பாவந்தூர், சாத்தபுத்தூர், பேரால், சித்தால், நூரோலை மேலபழங்கூர் உள்ளிட்ட 11 ஊராட்சிகளில் நடைபெற்ற பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர், தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற் கிள்ளி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 2026 தேர்தலை முன்னிட்டு கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார், இதில் ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரை யாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவால யத்தில் உள்ள கழக அலுலகத்தில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் அவர்கள் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா; 2. ஆக்கப் பணிகள் குறித்து,

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள்- 17.02.2025

**நன்னியூர் இராஜேந்திரன்**
செயலாளர்,
தி.மு.க. நெசவாளர் அணி




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் பாக முகவர்கள் கூட்டம் மேலேரி, பூட்டை, அரசம்பட்டு தேவபாண்டலம் ஆகிய ஊராட்சிகளில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, இதற்கு தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.ஆறுமுகம் தலைமை தாங்கினார், சிறப்பு அழைப்பாளர்களாக வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. மற்றும் தொகுதி பார்வையாளர் வ.அன்பழகன் ஆகியோர்கள் கலந்து கொண்டு பேசுகையில் வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் தொடர்பாக கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் பணிகளை ஆய்வு செய்து, ஏழாவது முறையாக தி.மு.க. ஆட்சி மலர்ந்திட நம் திராவிட மடல் அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்கள் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்கள். இதில் சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக நிலை முகவர்கள், பாக நிலை உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னாடிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.